செ.வெ.எண்:. 1100 நாள்: 15.12.2010

**சமூகப் பாதுகாப்புத்துறை**

எண்.300, புரசைவாக்கம் நெடுஞ்சாலை,
கெல்லீஸ், சென்னை.600 010.
தொலைபேசி எண்கள் (044) 26426421 / 26427022

**சமூகப் பாதுகாப்புத்துறையின் செய்திக்குறிப்பு**

2006ஆம் ஆண்டின் இளைஞர் நீதி (குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) திருத்தப்பட்ட சட்டம் மற்றும் விதிகளின்படி அமைக்கப்பட்டுள்ள கீழ்க்காணும் **24 மாவட்டங்களுக்கான இளைஞர் நீதிக்குழுமங்களில்** சமூகப் பணி உறுப்பினராகவும் மற்றும் **அனைத்து மாவட்டங்களில் குழந்தைகள் நலக் குழுக்களுக்கு** தலைவர் மற்றும் உறுப்பினர்களாகவும் நியமிக்கப்படுவதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைக் கொண்ட சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் வசிக்கும் தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இப்பிரிவிலிருந்து ஒரு பெண் உட்பட உறுப்பினர்கள் மதிப்பூதிய அடிப்படையில் நியமிக்கப்பட உள்ளனர். இளைஞர் நீதிக் குழும உறுப்பினர்களுக்கு கீழ்க்காணும் மாவட்டங்களிலிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 2 | திருவள்ளூர் | 3 | விழுப்புரம் |
| 4 | வேலூர் | 5 | திருவண்ணாமலை | 6 | தருமபுரி |
| 7 | கிருஷ்ணகிரி | 8 | ஈரோடு | 9 | நாமக்கல் |
| 10 | திருப்பூர் | 11 | நீலகிரி | 12 | கரூர் |
| 13 | பெரம்பலூர் | 14 | அரியலூர் | 15 | புதுக்கோட்டை |
| 16 | திருவாரூர் | 17 | நாகப்பட்டிணம் | 18 | திண்டுக்கல் |
| 19 | தேனி | 20 | சிவகங்கை | 21 | விருதுநகர் |
| 22 | இராமநாதபுரம் | 23 | தூத்துக்குடி | 24 | கன்னியாகுமரி |

குழந்தைகள் தொடர்பான சுகாதாரம், கல்வி அல்லது நலப்பணிகளில் குறைந்தது 7 ஆண்டுகள் தீவிர ஈடுபாடு கொண்டவர்களாக விண்ணப்பதாரர்கள் இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர்கள் 35 வயதுக்கு குறையாதவராகவும், 65 வயதைப் பூர்த்தி செய்யாதவராகவும் இருத்தல் வேண்டும். தற்போது உறுப்பினராக உள்ளவர்களும் இரண்டாவது பணிக்காலத்திற்காக விண்ணப்பிக்கத் தகுதி உடையவர்களாவர்.

இளைஞர் நீதிக் குழுமங்களில் சமூகப் பணி உறுப்பினராக/ குழந்தை நலக் குழுக்களில் தலைவர் மற்றும் உறுப்பினர்களாக நியமிக்கப்படுபவர்கள் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இளங்கலைப்பட்டம் பெற்றிருத்தல் வேண்டும். குற்றவியல், உளவியல், சமூகவியல், சமூகப்பணி, பொருளாதாரம், மனையியல், கல்வி, அரசியல், அறிவியல், பெண்கள் சம்பந்தப்பட்ட பட்டம், ஊரக வளர்ச்சி, சட்டம் (அ)) மருத்துவம் ஆகிய பட்டம் பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இதற்கான விண்ணப்பப் படிவத்தை www.tn.nic.in/socialdefence என்ற இணைய தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். ***ஏற்கெனவே விண்ணப்பித்த விண்ணப்பதாரர்கள் மீண்டும் விண்ணப்பிக்க தேவையில்லை.*** பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் “**ஆணையர், சமூகப் பாதுகாப்புத்துறை, ஆணையரகம், எண்.300, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, சென்னை.10**”, என்ற முகவரிக்கு 24.12.2010க்குள் கிடைக்குமாறு அனுப்புதல் வேண்டும்.

14/12/10

சமூகப் பாதுகாப்புத்துறை சிறப்பு ஆணையருக்காக.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
9